**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ஆம் நாள் திங்கள் கிழமை

**இ.ம எண்.1/2022**

**உள்**

**அசல் வழக்கு எண்.288/2022**

என்.கே. கருப்புச்சாமி ... மனுதாரர்/வாதி

/எதிர்/

வேளாங்கண்ணி பிரபு என்ற
வேளாங்கண்ணி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 27.02.2023–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. எஸ். ஹரிஹர ராமச்சந்திரன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி.எஸ். காந்திமதிநாதன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. தீர்ப்புக்கு முன்பு மனு சொத்தை பொறுத்து முன்ஜப்தி செய்ய வேண்டி கட்டளை 38, விதி 5 சி.பி.சி.யின் கீழ் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மனு.

2. மனுதாரர் அசல் வழக்கில் வாதி. வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டிய ரூ.19,75,000/–ஐ வட்டியுடன் செலுத்த உத்தரவிட வேண்டி வாதி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மனுவில் குறிப்பிட்டபடி சொத்தை முன்ஜப்தி செய்ய வேண்டி இந்த

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிடுவது யாதெனில், மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்தை தவிர எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரர் கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகவும், மனுவில் உள்ள சொத்தையும் எதிர்மனுதாரர் கிரையம் செய்து விட்டால் தாவா தொகையை எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து வசூலிப்பது சிரமம் என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையில், வழக்கு ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வழக்குரை மற்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை பார்க்கும்போது, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நீண்ட நெடுங்காலமாக கொடுக்கல், வாங்கல் உறவுமுறை இருந்ததாகவும், அந்த வகையில் ரூ.33,75,000/-ஐ மனுதாரருக்கு எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமெனவும், அந்த தொகைக்காக எதிர்மனுதாரர் வீட்டை மனுதாரருக்கு விற்க முன்வந்து, ரூ.46,00,000/- பேசப்பட்டது எனவும், அத்துடன் அந்த சொத்தின் மீது வங்கியில் உள்ள கடனாக ரூ.22,00,000/-ஐ மனுதாரர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென பேசப்பட்டதாகவும், மேற்படி தொகை போக மீதி ரூ.19,75,000/- என பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டு, அதற்கு பிரதிவாதி வாதிக்கு ஆதரவாக ரசீது எழுதிக் கொடுத்ததாகவும், அத்துடன் காசோலை கொடுத்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. எதிர்வழக்குரை மற்றும் ஆட்சேபணையில் மேற்படி காசோலை மற்றும் ரசீதில் உள்ள கையெழுத்து விவரத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர் குறிப்பாக மறுக்கவில்லை. இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை பார்க்கும்போது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்கள் வேறு 3-ஆம் நபருக்கு விற்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனு சொத்து எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான கிரையப் பத்திரம் மற்றும் வில்லங்கச் சான்றிதழ் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் கண்ட சொத்தைப் பொறுத்து வழக்கு முடியும்வரை எதிர்மனுதாரர் பாராதீனம் எதுவும் செய்ய மாட்டேன் என தெரிவித்து பிரமாண பத்திரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் மனுவில் கண்ட சொத்தை பாராதீனம் செய்ய அனுமதித்தால் வழக்கின் தன்மை பாதிக்கப்படும். ஆகவே,

மனுதாரர் கோரிய முன்ஜப்தி பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்பட்டு, மனு சொத்தை ஜப்தி செய்ய உத்தரவிடப்படுகிறது. படி கட்ட 3 நாட்கள் கால அவகாசம். அழைக்க 03.04.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதி, விரிவாக்கம் செய்து, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2023–ஆம் வருடம் மார்ச் மாதம் 06–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.03.06 11:57:11 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.ம.எண்.1/2022
உள்
அசல் வழக்கு
எண்.288/2022
உத்தரவு – தெளிவு
நாள் – 06.03.2023